உ

புதுவை

ஸ்ரீ மணக்குள விநாயகர்

# ஒருபா வொருபது

"வித்தக"ப் பத்திராசிரியர்
யாழ்ப்பாணம் தென்கோவை
**ச. கந்தையபிள்ளையவர்கள்**
இயற்றியது

"வித்தகம்" உரிமையாளர்
புதுவை
ஸ்ரீமாந் ரா. நாகரத்தினம்பிள்ளையவர்கள்
அநுமதப்படி

STACKS

கொழும்பு வாசி
ஸ்ரீமாந் ஞா. இராசதுரை, B. A. (Lond.), A. C. A.,
அவர்களால் வெளியிடப்பட்டது.

சுன்னுகம் :
திருமகள் அழுத்தகம்

நந்தன பங்குனி] 1953 [விலை சதம் 25

30.08 KAN N.17

# அறிவித்தல்

மூவாண்டுகளாக வெளிவந்த "வித்தக" வார சஞ்சிகைகள், இப்பொழுது கிடைப்பதற்கு அரியவாயினமையால். அவற்றின்கண் உள்ள கட்டுரைகள், சமீபகாலத்தில், புதுவை, ஸ்ரீமான் ரா. நாகரத்தினம் பிள்ளையவர்களால், புத்தக ரூபமாக வெளியிடப்படும்.

உ



# முகவுரை

யாழ்ப்பாணம், புன்னாலைக்கட்டுவன்
வித்துவ சிரோமணி
**ப்ரஹ்மஸ்ரீ. சி. கணேசையரவர்கள் எழுதியது**

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

"ஸ்ரீமணக்குள விநாயகர் ஒருபா வொருபது"
என்னும் இந்நூல், புதுவை நந்தியெம்பெருமான்

அருண்மாரியாய்ப் பொழிந்த வேத உண்மைகளை அடிப்படையாகவும், வேதாகமங்களையும், திருவாசகம், திருமந்திரம், தேவாரம், திருவாய்மொழி, ஔவை குறள் முதலிய தத்துவப் பெரியார் அநுபவத் திருவாக்குக்களையும் பிரமாணமாகவும் கொண்டு பழைய சைவ உண்மைகளையும், உண்மை முத்தி இது என்பதையும் நன்கு விளக்கி நிலைநாட்டிய 'வித்தகம்' என்னும் உத்தமபோத பத்திரிகையின் சாரமாகி அமைந்துள்ளது. இந்நூலிற் குறிப்பாகவும், சுருக்கமாகவும் கூறப்பட்ட உண்மைகள் "வித்தக" இதழ்களில் நன்கு விரித்து விளக்கப்பட்டுள்ளன. ஆதலால் இந்நூல், சைவ உலகிற்கு மிகப் பயன்படத்தக்க தொன்றும்.

பண்டைக்காலத்து இருடிகளும் முனிவர்களும், உண்மைச் சித்தர்களும், மணிவாசகர், மூவர் முதலிய மெய்யடியார்களும், ஆழ்வார் என்னும் திருநாமத்துக்கு வாய்மையில் இலக்கியமாகி வதிந்த மகான்களும், பிறர் பலரும் அடையப்பெற்ற முத்தியின் உண்மையை அறிந்தவர்கள், இந்நூலிற் கூறப்பட்ட முத்தி நிலையே உண்மை என்பதையும் நன்கு உணர்ந்துகொள்வார்கள்.

இருவினை சொரூபமா யமைந்து, பிணி மூப்புச் சாக்காடுகளுக்கு இடமாகிய அசுத்த தநுவை (செடிசேருடலம்) குருவருளாற் பெறப்படும் உரிய சாதகங்களால், அமலதநுவாகிய பிரணவ மந்திர வடிவமாக மாற்றிய (மாற்றிப் பிறந்த) சீவன்முத்தர்களே, அவ் அமலவடிவோடு, அருளாய், வெளியாய், ஞானகாசமாகிய பரத்தில் ஒடுங்கி, மீண்டு வாராநிலையாகிய இவ் வரிய பெரிய முத்திநிலைக்கு அருகராவர். இம் முத்திநிலையே உண்மையென்பது எமது துணிபும் ஆம். அநுபவ ஞான முடையவர்க்கே இதன் உண்மை நன்கு புலனாகும்.

இக்காலத்தில், இம் முத்திநிலை அடைவோர் காணப்படாமையால், முன்னே பலர் அடைந்தன ரென்பது பௌராணிகர் அதிசயோக்தி ("புராணப் புளுகு") போலும் என அரற்றி அமைவாரும் உளர்போலும்! எனின், பல நூற்றாண்டுகளின்முன், ஆகாயவிமானங்களிற் போக்குவரவுகளும், போர் புரிதலும் நிகழ்ந்தன என்னும் புராணேதிகாசக் கூற்றுக்களைப் பொய்யெனக் கருதினார் பலராகவும், இன்று அந் நிகழ்ச்சிகள் யாவர்க்கும் கண்கூடாகி மெய்யாயின அல்லவா? எனவும், இதுபோலவே, காலகதியில், சீவன்முத்தராதற்குரிய பக்குவ சீவர்

உளராகுங்கால், இம் முத்திநிலையும் கண்கூடாகி உண்மையாதலே இயற்கையின் திறன் எனவும் அபிமானம் பற்றிய காய்தலும் உவத்தலும் அகற்றி உணர்வார்ப்பெறின், அன்னார் உண்மையாகிய "சத்தியத்திற்கு என்றும் அழிவில்லை" என்னும் ஆன்றோர் உரையை நன்கு கடைப்பிடித்து ஒழுகி உய்தியடைவார் என்பது திண்ணம். இது நிற்க,

இந்நூலை இயற்றியவர், புதுவை நந்தியெம் பெருமான் அடியவருள் ஒருவரும், "வித்தக"ப் பத்திராசிரியருமாகிய பண்டிதர், தென்கோவை ச. கந்தையபிள்ளையவர்களாவர். இவர்கள் சுன்னாகம் வித்துவ சிரோமணி அ. குமாரசுவாமிப் புலவர் முதலிய புலவர்களிடத்தில், இலக்கண இலக்கியங்களும், சமய சாத்திரங்களும் முன்னே கற்றுள்ளவர்கள்.

இந் நூல் 1936-ம் ஆண்டில் "வித்தகம்" தொகுதி 3, இலக்கம் 50 இல் வெளிவந்துள்ளது. இப்பொழுது அறிஞர் பலர் விரும்பியவாறு, சுவடி ரூபமாக வெளியிடப்படுவதாயிற்று.

இந்நூல் என்றும் நின்று நிலவுவதாக!

சுபம்!

**சி. கணேசையர்**

உ

# புதுவை
# ஸ்ரீ மணக்குள விநாயகர்
# ஒருபா வொருபது

உலகெலா மாக்கி யளித்துநின் றொடுக்கும்
ஆதியா மன்னை வடிவெனு மமல
நாதவொலி காட்டும் பாதபங் கயமும்
வாசிவச மான மாசினிலை காட்டும்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
சர்ப்போப வீத முப்புரி நூலும்,
அகில சராசர மடங்குபெரு வடிவாய்
அண்டமா ருலகு கொண்டபல் பொருளெலாம்
முன்னிலை யாக முறைநிறை தழீஇ
அருந்திடு நீர்மைசா லமலநெறி காட்டும்
மோதக மாதி திணித்தபெரு மோடும்,
பந்தமறு நிலையாங் கந்தழி காட்டும்
பொன்மணிக்கலனும் பூந்தார்க்கொன்றையும்,

உடலுயி ரியக்க வொருப்பா டென்னும்
இருவினை யொப்பு மலபரி பாகமும்
சத்திநி பாதமுஞ் சாரரு ணிலையாம்,
பூவு நீருங் காலும் வானும்
ஒரோவொரு புறமா விராவி நிலைக்கும்
சதுரப் பாழெனுஞ் சதுரப் பாடு
நாற்கரங் காட்ட நான்றபொன் னூசல்
ஆட்டயர் துதிக்கை யமலவக் கிநியாம்
சிவமெனுஞ் செழுஞ்சுடர் நவமுற வெழுந்து
கதிக்கும் வியாப்பிய வியாபக சந்தியாய்
உபய கலையு முணருநிலை காட்டும்
அஞ்சக் கரமெனும் பஞ்சக் கரமும்,
பிணியெனுங் காலைப் பிணிக்கும் பிணியும்
வாலிய தென்ன வயக்குகழு வாயும்
காட்டும் பாசமுந் தோட்டியும், அஞ்சலென்
றடியேற் கருளு மபய வரதமும்,
வித்தக முறலான் மேவுமத் துவித
ஏகநிலை காட்டு மேக தந்தமும்,
அமல வெறுக்கை யளியொடு பெருக்கி
அசையா தசையு மிருசெவிக் கவரியும்,
அகில மீன்ற வொருதனி முதல்வி

மவுன மந்திர மகர வடிவினள்
பிடியெனப் பகவன் களிறெனப் புணர
விந்து நாத வடிவென மிளிர்ந்தே
ஓவென வொலித்திட் டும்மென வூன்றும்
அருளொளி திகழும் பிரணவ வடிவொடு
சீவன் முத்திச் செவ்விநனி தெரிக்கும்
குருபர னிவனெனக் குலவுதிரு முகமும்,
முத்தீ விளக்கங் காட்டுமுக் கண்ணும்,
சிவநீர் பெருக்குஞ் செக்கரஞ் சடையாம்
பகுவாய்ப் பாந்தட் பணைமுடி யென்னும்
பொன்னியன் மகுடஞ் சென்னியிற் பொலிய
மாலை மதியென வயங்குபொன் வண்ணமும்
திகழுந் தெய்வத் திருவுருக் கொண்டு,
அன்னையைப் பேணி யன்னவ ளருளால்
ஆக்கையுறு பொருளா மப்பனடி தொழுது
கல்வியுங் கேள்வியுங் கைவரப் பெறீஇ
மணங்கமழ் தெய்வத் திளநல மென்னும்
சிவமணந் திகழத் தவநெறி காட்டும்
கந்தழி நிலைஇய விந்து மதஞ்சால்
பெறலரும் பரிசு பெற்றமெய் யடியர்தம்
விமல யாக்கையாம் வேளூ ராங்கண்

மணக்குள மகிழ்ந்து வதிதரன் மானத்;
தத்துவப் பெரியராஞ் சித்தரருள் தவாத
இந்து தேயமாந் தென்றமிழ்த் தேத்து
நம்பந்த நீக்குஞ் சம்பந்த முனிவன்
என்புபூம் பாவையா யெழுந்திடப் பணித்த
விம்மிதந் திகழும் வீறுசால் தொண்டை
வளநாட் டங்கண் மன்னிய வேத
புரியெனப் புகலும் புதுவையம் பதியில்
நம்பல மாக வம்பலத் தாடும்
ஐயனமர் வீதியி னொருசா ரவனென
மணக்குள வாழ்வு மகிழ்ந்தருள் வரதன்;
கவிகட் கெல்லாங் கவியெனுங் கடவுள்
அம்பிகை தனய னடியடைந் தோருக்
கெய்ப்பினில்வைப்பாமிறையவன்;முன்னோன்
விக்கின விநாயகன் வினையுரு வாகிய
என்னுளம் புகுவதோ ரிறும்பூ துடைத்தே. (1)

உடைமணி யோசை யுலகெலாங் கேட்பநின்
அருசனை யமரு மள்ளிலை நெடுவேல்
வள்ளிமண வாளன் புள்ளிமயி லேறி
ஒருமூ வுலகும் வலம்வரு முன்னர்

அகில வுலகமு மடங்கிய நிறைது
பெருவயிறு தூக்கிக் குறுக நடந்து
சராசர வடிவாந் தந்தையை வளாவி
மாங்கனி பெற்று விழுங்கித் தீஞ்சுவை
கண்டருள் கற்பனை கொண்டிடு தத்துவம்
ஈங்கெனக் கியம்புதல் வேண்டு மோங்கிய
விண்ணத் துயரிய தண்ணிலாத் தவழும்
பூம்பொழி னடுவட் பூழைவழி நுழைஇக்
குறிவழிச் சென்ற சிறுகண் மந்தி
மாங்கனி யுண்டு வதிதர லம்ம
குரவன் குறிப்பின் வழுவா தொழுகிப்
புகலிடம் புக்கநின் பொன்னடித் தொண்டர்
மாவெனப் பூத்த காயப் பெண்ணும்
தேமாங் கனியுண்டு சிவானந்த விளைவெனும்
பேரின்பந் துய்க்கும் பெற்றி காட்டும்
வளந்திகழ் புதுவை மாநகர்
மணக்குளம் வதியும் வானவ ரேறே. (2)

ஏற்றுயர் கொடியுடை யிறைவனும் வீற்றுப்
பாற்கடற் றுயிலும் பரமனு மொன்றெனும்
உண்மை காண்ட லொண்ணுமோ! அதுதான்
படிப்புவல் லபத்திற் படுவதோ! அன்றே!

தத்துவப் பெரியார் தாமருண் மறைப்பொருள்
குரவனரு ளின்றிக் கூடுவ தாமோ!
புராணக் கற்பனைப் பொருளு முணரா(து)
ஏற்றத் தாழ்வுரைத் தேளனஞ் செய்து
குறைபல பேசிக் குதுகுதுப் புறீஇக்
கசட்டு மனத்தாற் கலாம்பல விளைத்துக்
கும்பிக்கா ளாயினர் குறையா மாக்கள்
நந்திவடி வாகி வந்தெனை யாளச்
சித்தர்வாழ்புதுவையாந் திருப்பெருந்துறையில்
மணக்குளம் வதியும் வரத விநாயக!
உற்ற வாக்கையி னுறுபொரு ளாகிச்
சசிவண்ண னாகிச் சதுர்ப்புஜங் தாங்கிச்
சுக்கிலாம் பரத்திற் றுலங்கிடு நீயே!
விண்டு வென்ன விளம்பிடும் வேதம்,
இடமும் பொருளு முடலு முயிரும்
சத்தியுஞ் சிவமுமாந் தத்துவ மரீஇய
விண்டுவுஞ் சிவமும் வேறெனப் படுமோ!
நாரா யணனன் முகனைப் படைத்தனன்
பிரமன் படைத்தனன் சிவனை யென்னும்
அருமறை யறியா விருகாற் பசுக்கள்
போலிக் கல்வியாற் பொய்ப்பொருள் கண்டு

மாழ்கலுற் றுலகை மயங்கவைத் தனரே!
கரியமா லுந்திக் கமல மென்னும்
பரமா காச பங்கஜ தளத்தில்
புறப்பட்டுப் புக்கு வியாபி யாகி
உலகெலா மாக்கு முபய பூதமாய்
உடலுயி ராகி நடலையொ டாடிய
பிரமதத் துவமே யுரியசா தகத்தால்
வியாபகங் குறுகி வியாப்பியத் தோன்றி
அமலசிவ வடிவா யமைதரு மிதுவே
முத்திநெறி யான தத்துவ மெனநீ
உணர்த்த வுணர்ந்தன னுண்மை யானே*. (3)

யானே யெனக்கிக லுறவெனத் தெளிந்து
சிதையா லூக்கமொடு செந்நெறிச் செலீஇ
உலகிய ஞடி யொப்புர வொழுகி
முன்னிலை யாவையுந் தன்னிலை யாக்காது,
நில்லாப் பொருளை நிலையென நினைஇ
அழுக்குநெறிச் செல்லு மசட்டுப் போலி
முன்னிலைக் கோரணி முன்னிநின் றுடற்ற
அலமந் துள்ள மயர்த்தனன் மன்னே!

(* உண்மை ஆன் - உண்மை ஆக.)

மடிமடிக் கொண்டு மாழாந்து நின்று
பணிசெய்து கிடவாது பராக்குறீஇ நாளும்
நீளச் சென்று நினைவிழந் தனனே,
உணவேயுணர்வெனு முண்மையையுணர்ந்தும்
கணமேயு மதனைக் கடைப்பிடித் திலனே,
அவாவினை அருளுறு நாட்டந் தவாது
துவரத் துறந்து நிறைமுறை தழீஇத்
துப்புர வமையா துப்பொடு காடியாம்
விந்து நாத விளைவா னியலும்
தூலச் சிவைக்குக் கேடுசூழ்ந் தனனே;
ஐம்பூ வென்னு மைந்தாந் திணையாம்
என்பினுண் மறையா மன்பெனு மப்பினைத்
துப்பெனுங் களிம்பு நீக்கி யொப்புற
அமுத மாக்கி யருவா யுள்ளாய்
ஆக்கையுறு பொருளா மருளினை யாக்காது
திடனிலா யாக்கை யுடனுறீஇ நாளும்
துன்புறாஉ நிலைமையிற் றுவக்குண் டனனே
குருநெறி நாடாது தெருமர லுழந்து
பத்திமை யின்றிப் பாவமே தடித்துக்
குரோத மதமாதி குணங்களுக் கிடமாம்
தன்னிலை யாகிய வென்னிலை யிதுவெனின்,

அருளுறு வடிவா யமைந்துமுன் னிலையில்
நந்திவடி வாகிநீ வந்திட லெவனே! [கம்
தவறுபெரி துடைத்தென் சால்பிலா வொழுக்
அன்பிலன் கொடிய னளியில னெனினும்
செய்ந்நன்றி யறியாத் தீனனே யெனினும்
மக்களொடு மனையே யொக்கலென் றினைய
அசட்டுமுன் னிலைகளா னலந்தலை யுறீஇ
அறிவறை போகிய நிறையிலா வுளத்தால்
உடல்பொரு ளாவியை யுன்னடி யிணைக்கே
அர்ப்பணஞ் செய்யா வாதனே யெனினும்
சாதகத் தெளிவு மேதகக் காணுமுன்
சோதனை பிழைத்த துரிசுளே னெனினும்
புறமெனைப் போக்கா தருண்மதி! யெந்தாய்!
பணிசெய்து கிடக்கும் பண்பெனக் கருளித்
தொண்டரிற் கூட்டித் துயர்களைந் தருண்மதி!
பொறிவாழ் பூவொடு சிறுவெள் ளாம்பலும்
மருங்கே யொருங்கி மலர்ந்து மணக்கும்
வாவிதிகழ் புதுவை மணக்குளப் பதியிற்
குருபர னாகிக் குலவு முன்னவனே. (4)

முன்னிலை யுலகியன் மொழிந்திடப் படுமோ!
உண்மையொடு போலிக் கொப்புமையெவனே

அருளொடு மருணிலை யனையநீர் மையதாம்!
இடையீட்டின் பெற்றி யியம்பிடத் தகுமோ
பொய்யதே மெய்யா மெய்யதே பொய்யாக்
கற்பனைப் போலியே தத்துவ மாயது
செத்துப் போதலே முத்தி யென்னும்
அசத்திய நெறியே சத்திய நெறியாம்
வேதாந்த சித்தாந்த வியனெறி யாயது!
பொய்கண் டுரைத்த பூரி யோரே
மெய்கண் டருளிய வித்தக ராயினர்!
அதனால், உண்மையுரைப் போரைக் கண்மை
ஏளனஞ் செய்யு மியலதே யுலகம் [யின்றி
விடமே யுருவா மிடமன்றே வுலகு
அழுக்கினை யழுக்கா லகற்றுதல் போல
அருந்தல் பொருந்த லனந்த லமைதந்
தாலத்தை யமுத மாக்கு மவரே
காலனைக் காலா லுதைக்குங் கடவுளர்
விதியினை வெல்லும் வித்தக ரம்மா!
விதியினை வெல்லாது மெய்பொய் யாக
இறந்தோர் முத்தி யெய்துவ தெவனே!
விதியினை வெல்லுதல் மெய்விண் வடிவென
ஊனமி லருவ வொளிமய முறூஉம்

தத்துவர்க் கன்றிச் சாலா தெனவும்
"சத்தமோ டொன்றி மனமு மிறந்தபின்
முற்று மழியா துடம்பு" தா னெனவும்
ஐய! நின் னருள்பெறு மவ்வையா ரருளிய
மறைமொழி தன்னையு மாக்கள்தேர்ந் திலரே!
தத்துவப் பெரியார் தாமருண் மறைப்பொருள்
கல்லா மாக்கட் கொல்லுவ தாமோ!
போலிவித் துவத்தாற் புலப்பட ஆமோ!
கல்வி யெனினே காவிய சாத்திர
இலக்கணப் பெயரா னியன்றபன் னூல்களைப்
படித்தலே யென்பர் பாருளோர் யாவரும்
கண்ணான் ஞானங் கருதுநெறி காணார்
கண்ணுடை யவரே கற்றவ ரென்னும்
செந்நாப் புலவன் றிருமறை யோரார்!
வேடம் பூசை யாதிய நடைநொடி
சாடையும் போலி நிட்டையும் பிறவுமே
முத்தி நெறியென மொழிகுவர்; உவையும்,
பிராணனெ டபானனைப் பேசிட நின்ற
கொடிநிலை வள்ளி வடுநீங்கிச் சமமுறக்
கந்தழி காட்டுங் கந்தருவ மென்னும்
இயற்கைநன் னெறியா மில்லறந் தழுவாது

பெற்றசிற் றின்பமே பேரின்ப மாகும்
பிரம சரியப் பெற்றியு மறியாது
இந்திரிய நிரோத வியல்பு மறியாது
இந்துமத வுண்மை யிலேசமு மறியாது
செயற்கை நெறியான் மயக்கநனி யுறீஇத்
துற்றவை துறந்து வற்றி நாளும்
உடலுயிரை வாட்டி யுணர்ச்சி மழுக்குற்று
வாயொடு கண்மூடி வதியு நிலையாம்
அசத்திய நெறியுமே யுடலசத் தாகிச்
செத்துப் போனபின் முத்திதரு மென்பர்!
அள்ளூ ருக்கையி னருமை யறியாது
விமல யாக்கை மேவுமண் ணுவில்
அமுத மூறு முண்மையு மறியாது
புவியுட் புதைந்து நாறும் பிணங்களும்
அள்ளூ றமுத வாக்கையென் றரற்றுவர்!
சத்துவந் திகழ்சிவ தத்துவ மாகிக்
கடையா யுள்ளாய்க் கடவுளென நிலைஇய
ஆக்கை யுறுபொரு ளாகிய விந்தெனும்
சத்துப் போகச் சவநெறி கண்டபின்
அமுத வடிவா மமல னகன்றபின்
புரிசடை யீசன் புறப்பட்டுப் போனபின்

அள்ளூ றாக்கைபெற் றமுத முண்டு
சிவத்துவந் திகழ்ந்து சிவாங்க மாதலாம்
முத்திநிலை யென்பது முயற்கொம்பே யன்றோ!
சச்சிதா னந்த தத்துவ நிலையும்
சத்துஞ் சித்துமாய்ச் சமைந்த வுடலுயிர்
இயக்கவொப் புமையா னியலுந் தீயாய்
விமல யாக்கையில் விளைவுற் றெழூஉம்
அமல வருளொளி யாகுமுத் தீயாம்
அகண்டா கார வருட்பெருஞ் சோதியின்
அருமை பெருமையு மகில மாக்கள்
அறியவல் லுநரோ! அறியவல் லுநரோ!
இருவினை யொப்பும் மலபரி பாகமும்
சத்திநி பாதப் பெற்றியு மறியாது
மருளுடம் பினரே மன்னிய சீவன்
முத்த ரென்னு மூடக் கொள்கையால்
முத்திநெறி யறியாது செத்துப் போன
குருட்டுமாக் களையே குரவரெனத் துணிந்து
சிவாப ராதமாந் தீமையு முணராது
தத்துவப் பெரியரோ டொப்ப மதித்துப்
பூசையும் விழவும் புரிகுநர் பலரே!
தத்துவப் பெரியார் தம்புகழ் நிலைஇய

தமிழக மாந்தர்க்குச் சாலுமோ விவையே!
அடியவ ரியலு மன்னவர் பெருமையும்
செடிசே ருடலைச் செலநீக்கி யமல
வடிவப் பேற்றிலவ் வடியவ ரடைந்த
அளப்பிலாத் துன்பமு மப்பேற் றருமையும்
ஊனங்க ளெட்டு மறவே யொழிந்த
ஈனமில் காயமாம் ஓவடி வதுவே
சீவன் முத்தர் திருவுரு வெனவும்
தெரிசனத் தன்றிப் பரிசனத் தமையா
அதுவே யருவுருத் திருமேனி யெனவும்
அன்ன வமல வடிவே யருளாய்ப்
பல்லோருங் கண்டு போற்றப் பரமாம்
ஞான காசத்து நண்ணி யொடுங்கும்
சத்திய நிலையே முத்திநிலை யெனவும்
வேதாக மாதிகள் விளம்புவது மறியா(து)
அநாதி யாகவிவ் வவனியிற் றோன்றிய
எண்ணிலா முனிவரு மிருடி கணங்களும்
அகத்தியர் போக ராதியாம் பலப்பல
சித்தர் குழாங்களுஞ் சிவவாக் கியரும்
அல்லமப் பிரபுவு மிரேணுக ராதி
பஞ்சவா சிரியரு மற்றையோர் பலரும்

அண்ணல்திரு மூலனு மவ்வைப் பிராட்டியும்
மூவடி முப்பதா முதுமறை யருளிய [ரும்
இடைக்காட்டுச் சித்தரு மெண்ணில்பல் லடிய
அண்ணல்வச வண்ண ராதியோர் பிறரும்
மாணிக்க மணியா(ம்) நங்கண் மணியும்
சம்பந்த ரப்பர் சுந்தரர் மூவரும்
கண்ணப்பர் நந்தனார் சேரமா னாதி
வித்தகந் திகழுமெய் யடியவர் பலரும்
ஆண்டா ளம்மைநம் மாழ்வா ராதிய
ஆழ்வார் திருநாமக் கரும்பே ரிலக்கிய
மாகி மிளிரு மருந்தவப் பெரியரும்
பட்டினத் தடிகள் பத்திர கிரியார்
சேந்தனார் முத்துத் தாண்டவ னாரும்
உலகர் போல்வாழ்ந் தொப்புர வொழுகி
இன்ப வாழ்வி னன்புநெறி தழீஇ
உடலு முயிரு மொழிவற வொன்றிப்
பிணிமூப்புச் சாக்காடும் பிறவியு மகன்றே
அகிலங் காண வருளாய் வெளியாய்
முத்திநிலை பெற்ற தத்துவ முணரா(து)
அருண்மலி சொல்லினு மரும்பெருஞ் செயலினும்
அன்னவர் நாட்டிய வுண்மையு முணராது

செத்துப் போதலே முத்தியெனப் பிதற்றித்
தடுமாற்ற மடைந்து சைவ மறியா(து)
இந்து தேசமாஞ் செந்தமிழ்த் திருநாடு
தவிக்குமிந் நாளிற் றண்ணருள் கொண்டே
அதிகுஹ்ய மான வருமறைப் பொருளெலாம்
தமியேற் குணர்த்தியித் தரணியோ ருய்வான்
"**வித்தகம்**" என்னுமிவ் வுத்தம போத
பத்திர வாயிலாய் வெளியிடப் பணித்தே
அன்னதை நடாத்தி **யரும்பெரு முத்தி**
**வித்தினைத் தமிழக மேவிட வூன்றிப்**
புண்ணியம் புகழொடு நண்ணி மேலுறும்
பணிகட்கு மடியனை யருகணைப் பயிற்றித்
திருவுளம் பற்றிய கருணைக் கம்ம!
கடையேன் றரத்ததோ கைம்மா றதுவே!
வேதவொலி நாளு மோவா தொலிப்ப
ஞான சத்தியா(ம்) நந்தியெம் பெருமான்
வரமலி கயிலை வதிதரன் மானச்
செந்தமிழ் வளஞ்சால் திருப்பெருந் துறையாம்
வேத புரியெனும் போதமார் புதுவை
அம்பலத் தாடு மையன் வீதியில்
நந்தி மன்றத் தருகே நண்ணிய

தெய்வ மணக்குளத் திருத்தளி தன்னில்
அவனே யாகி யமரும்
சிவசுத னாகிய தேசிக மணியே. (5)

மணிமன்று ளாடும் வரதனருள் வடிவாம்
தேசிக நினது தெரிசனம் பெறுதல்
மாசுறு முலக மாக்களுக் கெளிதோ
புண்ணிய கன்மம் புரிந்திடல் வேண்டும்
அன்னது மெளிதி னமைகுவ தெனினே
எண்ணில்பல் கோடி சென்மத் தீட்டிய
நற்றவப் பயனு முற்றிடல் வேண்டும்
பிறப்பிறப் பென்னும் பீழைக் கஞ்சி
அருட்டா கங்கொண் டலந்தலை யுறீஇ
முத்தி வேட்கை முற்றிடல் வேண்டும்
சாதன சதுட்டய சம்பன்ன ராகித்
தீவினை நிறையுஞ் சிறுகுதல் வேண்டும்
எவரைக் காணினு மிவர்கொலோ வெம்மை
ஆள வந்த நாத ரென்னும்
ஆராக் காத லமைதரல் வேண்டும்
கர்ம பேதஞ் சடபேதங் கண்டு
சீவர் தோறும் வேறுவே றாக

ஆட்பா லவர்க்குநீ யருளுஞ் சாதக
வேதகட் டங்களை மெய்ம்மையிற் றூங்கி
ஒழுகுவ தென்று லரிதினு மரிதே!
இன்னன பண்பெலா மன்னும் பக்குவம்
என்னனை யாருக் கியைகுவ தாமோ
அரிதே யெனினுமுன் புரியுநற் றவத்தால்
புகலிட மாகிய புதுவைநகர் புக்கு
மூடமார் கழிமுடை முண்டத் தலைகொடுன்
சினகரந் தொழுது திருவடி யிணையைப்
போற்றும் பேறு வாய்த்திடு மெனக்கு
நந்திவடி வாயென் சிந்தையு ணின்று
வேத வுண்மையாம் வியனெடுஞ் சாகரத்
திவலை யாவது தெரித்தனை யாதலின்
பாசத்தா ழுருவிப் பற்றெலா மறுத்தெனைத்
திருத்தியுன் கோயிற் கடைபுகச் செய்தல்
அத்தநின் கடனென வமைந்தனன் மன்னே!
வேதசூத் திரங்களும் போதமார் குறளும்
அருளுமூ தாட்டியா மவ்வையை யருளார்
துதிக்கையா லெடுத்துத் தூநெறிச் செலுத்தி
மீண்டு வாரா மெய்ந்நிலை யருளி
ஆதி சத்தியி னவதார மென்னப்

போற்றிட வைத்த புராண காரண
புணரி முழக்கருப் புதுவையாம் பெருந்துறை
மணக்குளப் பதிவா ழுறப்பெருங் கடலே. (6)

அறம்பொரு ளின்பம் வீடென் றிவற்றின்
திறன்றெரிந் துணராச் செகத்தோ ரெல்லாம்
மறம்பொரு டுன்ப மரணமென் பனவே
அறம்பொரு ளின்பம் வீடென வமைந்து
மறத்தாற் பொருளீட்டி வருந்திமாள் குவரே
அறமே யிடமு முதலு மாகும்
அதுவே வீடென் றறைந்திடும் வேதம்
"இடம்பட வீடெடேல்" என்றன ளவ்வை
அமல வுடலே யருள்வடி வாகும்
அருளே யன்றிவீ டாகுவ தெதுவோ!
உடலழிந் தால்வீ டடைகுவ தெவனே!
பொருளே பொருளா மதுவே பொன்னும்
பொன்மயன் சிவனெனப் புகன்றிடும் வேதம்
உடலேபொன் னெனவு முரைத்திடப் படுமே
செம்பொன்செய் சுண்ண மிடித்தல் வேண்டும்
வம்புபழுத் துடல மாளுதல் தகாதென
மணிவாய் மலர்ந்தவன் மாணிக்க மன்றே!

அறமும் பொருளு மொன்றுற வமைந்து
வீடுபேற் றின்பம் விளையு மென்ப
சிற்றின்பத் திரிவே பேரின்ப மாகும்
இனத்தை யினத்தா லீர்த்திட வேண்டும்
"பயனுறு கன்னியர் போகத்தி னுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச் சோதி"யென்
றருளின னன்றோ அண்ணல் திருமூலன்!
இடமழி வுற்றாற் பொருளு மழிவுறும்
இன்பமும் வீடு மிலவா மன்றோ!
உலகிய லுக்கு முண்மை நிலைக்கும்
நெறிதா னென்றே நிறைபேத மன்றோ!
வேறுபா டென்ன விளம்பிடும் வேதம்
ஆவது மழிவது மொன்றினா லென்பது
தேவராஞ் சித்தர் திருவாக் கன்றோ!
சிறுகக் கட்டிப் பெருக வாழ்ந்தே
ஆசைப் பேற்றை யடிப்படை யாக்கிக்
கஞ்சியில் வதிந்து காலாட்டி யுண்ணும்
சித்தரா மடியரே நித்திய மான
பேரின்பங் கண்டு பிணிமூப் பிகந்து
சாதலுறா வாய்மைச் சாத லடைந்து
முத்திநிலை பெறாஉந் தத்துவப் பெரியராம்

இந்நிலை கைவர லெளிதோ வன்றே!
அரிது அரிது மாஅரி தம்ம!
ஆசா னருளா னருந்தல் பொருந்தலாம்
கற்ற லென்னும் பயில்வுகைக் கொண்டு
முன்னிலை யாவுந் தன்னிலை யாகி
விக்கின மனைத்தும் மக்கின மாகித்
துன்பம் யாவு மின்பமாய்த் திகழும்
குற்ற மனைத்துங் குணமெனத் திரியும்
விக்கின விநாயக விழுப்பேறு வேண்டும்
அன்ன விழுப்பே றருளுங் குருபரன்
நந்திவடி வாகி வந்தெனை யாளப்
புதுவை மணக்குளப் பூங்கோயில் வாழும்
கற்பக விநாயக! சொற்பொருள் வடிவாய்
அம்பலத் தாடு மையனருண் மகவாம்
வரதனீ யன்றி மற்றையோர் எவரே. (7)

எவரே யெனினுமுன் னிணையடி தொழாதார்
முன்னிய கரும முடிக்கவல் லுநரோ
அரியயன் முதலோர்க்கு மாகா தன்றே
அரியயற் கரிய வமலநா யகனும்
மும்மல காரிய முப்புர மூதூர்

அமலவக் கினிக்கிரை யாக்கிய ஞான்று
விமலநின் றுணையே வேண்டின னென்றால்
விக்கின விநாயக விழுப்பே றதுவாம்
நின்பதம் பெறாது நீணிலத் தெவரே
சித்தியு முத்தியுஞ் சேர்குந ரம்மா!
அமலமுதற் படியாய் நிலவு மிதுவே
முத்தி வாயிலென முழங்கிடும் வேதம்
மலபரி பாக மன்னு கந்தழியும்
ஆறெனு மறிவு பூரணம் பெறீஇய
மாணிட ரென்னு மக்களாம் பேறும்
வாசி வசமான வாசிட்டப் பேறும்
விசுவமித் திரமாம் விழுமிய பேறும்
வேண்டியன யாவும் வேண்டியாங் கெய்தும்
கற்பகந் திகழுங் கற்பகப் பேறும்
ஐந்துந் திரப்படு மைந்திரப் பேறும்
குபேரசம் பத்தெனுங் குறைவிலாப் பேறும்
மாபோகி யாகி மன்னிடும் பேறும்
துன்பெலா மொருவுபே ரின்பப் பேறும்
இதுவே யென்னி னிதன்றிற மியாரே
கிளக்குந ரம்ம நினைத்தபல் போகம்
புணராத் துறவு போலியே யன்றோ!

ஆக்கையு ளசுத்த நிறையென வமைந்த
மாயையைத் துரத்தலே வாய்மைத் துறவாம்
காய மாயங் கழிதலு மிதுவே
கதவந் திறந்து மறைக்காடு கண்டே
அமலமா ரறநிலை யமைதர வேண்டும்
இந்நிலை யெளிதின் மன்னிட வெனக்குன்
திருவருள் வழங்க வேண்டும்! கரவாது
வேண்டிய நல்கு மாண்டகு சிந்தா
மணியெனத் தேவர் வழுத்திடும் விமல
வல்லி யென்னும் வல்லபை மணாள!
புத்தி சித்தியாம் பூவையர் கணவ!
செத்துப் போதலே முத்தியெனத் துணிந்த
உலக மாக்களுக் குண்மைச் சைவ
முத்திநிலை காட்டு மூலபண் டாரப்
புத்தமுது வழங்கும் புதுவை மணக்குள
வித்தக விநாயக விமலவைங் கரனே. (8)

கரமுறு தீயைக் காதலோர்க் களிக்கும்
திரமுறு தீக்கையாற் றிரிமல மறுத்துப்
புன்புலா லுடலைப் பூங்குட லாக்கி
அருளுறு வடிவோ டுருவாய்ப் பரத்தில்

கற்பூர தீபம் போலக் கலக்கும்
வேதாந்த சித்தாந்த வியனெறி யாகிய
முத்திநெறி காட்டும் வித்தக நந்தியெங்
குருபர னருண்மலி புதுவையி லவனென
மணக்குளம் வதிந்தருள் வான நாயக!
மூலா தாரத்து முளைத்தெழு சோதியாய்,
ஐம்புல வேட ரரும்பெறல் வெறுக்கையாம்
வள்ளியை வெருட்டி வடியிலை நெடுவேல்
முருகற்கு வழங்கிய முன்னவ! அன்பிலா
என்னி னெனக்கினிய வின்னருண் மூர்த்தி!
வினையேன் விண்ணப்பமொன் றுரிமையொடு
கேண்மதி!
முன்னையூழ் வலியா லின்னல் பலவுழந்
தேது மறியா வேழைமை வாய்ந்து
கணமுந் தணிவின்றிக் கலங்குறு மனத்தால்
பிணிபல நலியப் பிறிதொன்று நாடாது
திருவருட் டுணையே வேண்டிப் பொருவறு
சிவத்தலம் பல்ல வணங்கி யருத்தியொடு
திருக்கழுக்குன்றமாந் திருத்தளிக்கணிமையிற்
பாலிமா நதியின் பாங்கர் மேய
**கல்குளக்** குணதிசைக் கவினும் புராதன

சிவத்தல மாகித் தேவரும் போற்றும்
மூர்த்திதலந் தீர்த்த மும்மையும் வாய்ந்த
**மடவளா கப்**பெயர் மன்னிய பதியில்
வதியுங் காலைநற் கதியுற விழைந்தே
அம்மைதொ ழுற்றுஞ் செம்மைவினை கூட்ட
அத்திருப் பதிவா ழும்மை யப்பராம்
**கோகிலாம் பிகை**யெனுங் குயின்மொழி யம்மை
வாமத் தமருங் **காமேச** வள்ளல்
திருவருட் பணியாற் றெய்விகப் புதுவை
போந்திடு மடியேற் காந்துணை யாகித்
தீரா வினைபல தீர்த்திட் டநாதியாம்
உண்மைச் சைவச் செந்நெறி யாகிய
சத்திய நெறியு முத்தி நிலையும்
தெளிவுற வுணர்த்தி யருள்புரிந் தின்ன
உண்மைக ளெல்லாம் பன்னெடுங் காலம்
மறைபொரு ளாகி மறைவழக் கழிந்து
சரீரம் பிணமாகச் சாத லடைதலே
முத்திநிலை யென்னு மூடக் கொள்கையாம்
அசத்திய நெறியே சத்திய நெறியெனத்
தாண்டவம் புரிதலான் மாண்டகு சித்தராம்
தத்துவப் பெரியர்வாழ் தமிழக மாந்தர்
மறம்பொரு டுன்பம் மரணமென் பனவே
அறம்பொரு ளின்பம் வீடெனத் துணிந்து

புருஷார்த்த மிழந்து புண்ணிய புராதன
சைவ மறியாது தவிக்குநிலைக் கிரங்கி
"வித்தகப்" பெயரிய பத்திர மதனால்
பழமைதிகழ் தமிழகக் கழனிபண் படுத்துச்
சத்திய நெறியாஞ் சைவநன் னெறியும்
முத்தி நிலையும் வித்திடப் பணித்துத்
தோன்றாத் துணையாய்த் தொடர்ந்து பின்னும்
உண்மைபல தெரித்திச் செம்மைவினைப் பணி
மூவாண்டு முற்றுற வருளினை யாதலின் [யை
குருபர நினையே திசைநோக்கித் தொழுதுன்
பூங்கழல் சென்னியிற் கொண்டு போற்றுவன்
மேலும்பல் லாண்டிவ் "வித்தக" விழுப்பணி
நன்ன ராற்றிட வின்னருள் வழங்கித்
தமிழக மொன்றோ தாரணி முழுவதும்
பொய்திக ழசத்தியப் புலைநெறி நீங்கி
மெய்திகழ் சத்திய வியனெறி கண்டே
உய்ந்திடத் தெய்வ நந்திவடி வாகிப்
புண்ணியர் போற்றிட நண்ணித் தெய்விக
சதுர்வித வுபாயத்தாற் சைவநிலை நாட்டிப்
பொல்லாக் கும்பி புகுதரா தடியேன்
மருணிலை யகற்றி யருணிலை யதனில்
என்னையு மிருப்பவ னாக்கியுன்
அருளா ரமுத மருத்திடு கெனவே. (9)

எனதுயிர்த் துணையா மிறைவா போற்றி
மனமொழி மெய்களில் வாராய் போற்றி
துதிசெயு மடியரைத் துதிக்கையா லெடுத்து
விதியினை வெலச்செயும் விகிர்தா போற்றி
குருவடி வான குழகா போற்றி
மருள்வடி வகற்று மணியே போற்றி
விமலமெய் யடியார் விளைவே போற்றி
அமல ஐகார வடிவோய் போற்றி
தேவர்க்கு மரிய சிவமே போற்றி
மூவரும் போற்று முதல்வா போற்றி
வல்லபை மகிழு மணாள போற்றி
சொல்வடி வான சுடரே போற்றி
சித்தி புத்தி தலைவா போற்றி
முத்திநெறி காட்டும் வித்தக போற்றி
விக்கின மொழிக்கும் விமலா போற்றி
நக்கன் மதலையா(ம்) நம்பா போற்றி
தமிழ னாகிய சைவா போற்றி
ஆரிய னாகிய அந்தண போற்றி
மூலா தார முதற்பொரு ளாகிக்
காலனை யுதைக்குங் கால போற்றி
மெய்யடி யார்கள் வேண்டிய விளைக்கும்
கற்பக மான வற்புத போற்றி
இந்திரற் கருளு மிறைவா போற்றி

சந்திர சடாதர சங்கர போற்றி
மாசு நீங்கிய மனநிலை காட்டும்
மூஷிக வாகன முதல்வா போற்றி
கயமுகற் செற்ற கயமுக போற்றி
நயமிலா நாயேற் கருளினை போற்றி
சீயேது மின்றியென் செய்பணி கொண்ட
தாயினு மினிய தயாபர போற்றி
அன்னாய் போற்றி யத்தா போற்றி
பொன்னார் மேனிப் புனிதா போற்றி
அவ்வையா மன்னைக் கருளினை போற்றி
அன்னவ ளருளு மருமறை யோடென்
புன்சொலும் கொண்ட புண்ணிய போற்றி
நந்தியருண் மலிந்த ஞான பூமியாம்
புதுவைநகர் புரக்கு மரசே போற்றி
மணக்குளப் பதிவாழ் வரதா போற்றி
கணபதி போற்றி கணேச போற்றி
தற்பர போற்றி சாந்த போற்றி
போற்றி போற்றி சயசய போற்றியென
வார்த்தை மாத்திரமா வழுத்துறி னலதுனை
ஏத்திட வல்லுந ரியாவரிவ் வுலகே. (10)

மணக்குள விநாயகன் திருவடி வாழ்க.

புதுவை நந்தி பொன்னடி வாழ்க. சைவம் தழைக.

உ

ஸ்ரீ சாந்தசிவ சண்முகாய நம:

# நந்தி உபதேச பஞ்சகம்

**அறுசீர்ச் சந்த விருத்தம்**

முன்னிலை வேதந் தன்னிலை யானது
முனைசுழி நடுமய்யம்
தன்னிலை வேதம் அமலம் ஐகாரம்
தழைத்தது தண்டின்மேல்
நன்னிலை யீதென நவின்றனன் நந்தி
நாடின னவனடியைச்
சென்னியில் வைத்தான் சீர்மையு முற்றேன்
சிவசிவ வெங்கோவே. 1

கண்ட வழிதனைக் காணுக் கயவர்கள்
கதறியே மாய்ந்திடுவார்
துண்ட நுனிதனைத் தூண்டிடுந் துரைகள்
துஞ்சுவரோ துஞ்சார்
கொண்ட கணவனைக் கூரைமே லேற்றிக்
கூவிடுங் கூத்தியரைக்
கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்*
கதிர்வேல் முருகையா. 2

மாடும் மக்களு மற்றுள சுற்றமு
மாயா மாயமெனத்
தேடும் பொருணுஞ் சிவனடி யென்று
தேர்ந்திடு நல்லோர்கள்

---

*இதன் உண்மைப்பொருள் 'வித்தகம்' தொகுதி 2-இல "உடையது விளம்பேல்" என்னும் கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

கூடுங் கலையருக் குருநெறி யதனைக்
குறுகுவர் குறிப்பறிந்து
கேடுங் கெடுமே பாடும் படுமே
கெஜமுக னிளையோனே 3

மலந்தனை மலத்தால் மாய்த்திடு மார்நெறி
மாதவர் மாநெறிகாண்
சலந்தனைப் பூவொடு சமரசஞ் செய்பவர்
சற்சனர் சாகார்காண்
குலம்பல பேசிக் கூவிடு மாக்கள்
கூரைமே லேறுவரோ
சிலம்பொலி கேட்குஞ் செல்வர்தங் கோனே
திருச்சென்னி மலைநாதா. 4

இனமதை யினத்தி லிசைத்திட வேத
மியம்பிடும் பலகட்டம்
மனமதை மதிதனி லொன்றுறச் செய்தல்
மாமல பரிபாகம்
சினமதைத் தாண்டிச் சீரங்க நாதர்
சேவடி சேர்ந்துநின்றால்
கனமுள பாதை காட்டுவ ரென்றான்
கடையூ ரெம்பெருமான். 5

[சித்தர் திருவாக்காய் முத்திநெறிக்குரிய அரிய வேத வுண்மைகள் அமைந்த இப் பாசுரபஞ்சகம், அழிந்துபடாது, பலர்க்கும் பயன்படும்படி, இந்நூலுக்கு அநுபந்தமாக வெளியிடப்பட்டது.]